நகராட்சி நிர்வாக ஆணையரகம்
3 DEC 2018
சேப்பாக்கம், சென்னை - 5

சுருக்கம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2)துறை

**அரசாணை (நிலை) எண்.126** **நாள். 28.11.2018**

திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி, கார்த்திகை மாதம் – 12
**படிக்கப்பட்டது.**

1. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை, அமைச்சர் அவர்களின் மான்ய கோரிக்கை எண்.34–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு எண்.6 மற்றும் 9 நாள்.04.06.2018.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் அவர்களின் கடிதம், ந.க.எண். 15252/2018, நாள் 18.06.2018.

******

**ஆணை :-**

சட்டமன்ற பேரவையில் 04.06.2018 அன்று நடைபெற்ற மான்ய கோரிக்கையின் போது (34) மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

- **அறிவிப்பு எண்.6** "குடிநீர் விநியோகத்தில் புதிய முயற்சியாக அனைத்து மாநகராட்சிகள்/ நகராட்சிகளில் திட்ட மதிப்பீட்டிலேயே உள்ளடக்கி வீட்டு இணைப்புகள் வழங்கப்படும்".

- **அறிவிப்பு எண்.9** "அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் புதிய முயற்சியாக திட்ட மதிப்பீட்டிலேயே உள்ளடக்கி பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்கப்படும்".

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையர் பார்வை 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகளில் எதிர்வரும் 30 ஆண்டுகளுக்கான மக்கள் தொகைக்கு ஏற்றாற்போல் திட்டமிட்டு வடிவமைத்து அனைத்து பொதுமக்களுக்கும் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் எளிதாக கிடைக்கும் வகையில், நாட்டிலேயே முதன்முதலாக ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு வழங்கவும் மற்றும் அந்தந்த வீடுகளில் உருவாகும் கழிவு

நீரினை தெருவின் நகராட்சியின் பாதாள கழிவுநீர் குழாயுடன் இணைக்கும் விதமாக குழாய் பதித்தல் மற்றும் ஆய்வுக்குழிகள் கட்டுதல் போன்ற பணிகள் திட்ட மதிப்பீட்டிலேயே சேர்த்து, திட்ட செயலாக்க காலத்திலேயே ஒருங்கிணைத்து செயல்படுத்த திட்டமிடப்பட்டு திட்ட செயலாக்கம் அவ்வாறே செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், மேலும் வீட்டு இணைப்பு வழங்குவதற்கான முன்வைப்புத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணங்களை சம்மந்தப்பட்ட வீட்டின் வரிவிதிப்புடன் இணைத்து 10 தவணைகள் வரை தவணை முறையில் வசூலிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். இவ்வாறு நடைமுறை மாற்றம் செய்வதால், திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் மொத்த குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை வீட்டிணைப்புகள் திட்டம் முடிவுறும் காலத்திலேயே இணைக்கப்பட்டு திட்டத்தின் முழுமையான பயன் அனைத்து பொதுமக்களையும் சென்றடையும் எனவும், இம்முயற்சியால் பொதுமக்கள் பயனடைவதுடன் கணிசமான வைப்புத்தொகை மற்றும் மாதாந்திர சேவை கட்டணங்களும் குறிப்பிட்ட காலத்தில் முழுமையாக வசூலாக வாய்ப்புள்ளதாகவும், வைப்புத் தொகை திட்ட செயலாக்கத்தின்போது உள்ளாட்சி அமைப்புகளால் திட்டத்திற்காக வாங்கப்படும் ஒருபகுதி கடன் சுமையைச் குறைக்கவும், மாதாந்திர சேவைக் கட்டணம் இத்திட்டங்களின் நிலையான இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவினங்களை ஈடுகட்டவும் மிகவும் உதவியாக இருக்கும் என்பதாலும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு வீட்டு குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்ட வீட்டு இணைப்புகள் வழங்குவது குறித்து அரசின் ஆணையினை நகராட்சி நிர்வாக ஆணையர் கோரியுள்ளார்.

3. மேற்கூறிய சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கலாம் என முடிவு செய்து ஆணையிடுகிறது.

- அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் தொடர்பான வைப்புத்தொகை மற்றும் இணைப்புக் கட்டணம் ஆகியவை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் பொது நிதியில் வரவு வைக்கப்படும் என்பதால் அவற்றை தனித்தனியாக அந்தந்த நகராட்சி/ மாநகராட்சிகளின் சொந்த நிதியிலிருந்து செய்யப்பட வேண்டும். மேலும் ஒப்பந்ததாரர் மூலம் எண்ணிக்கையில் எவ்வித கட்டுப்பாடும் இன்றி இணைப்புகளை அனைவருக்கும் வழங்க வேண்டும்.
- குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டண வைப்புத்தொகை மற்றும் இணைப்பிற்கான கட்டணத்தினை அந்தந்த வீட்டு சொத்துவரி கேட்புடன் இணைத்து 10 சமதவணைகளாக வசூலிக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாதமும் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்ட இணைப்புகள் வழங்கப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட மாநகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சிகளை பொறுத்தமட்டில் சம்பந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆய்வு செய்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அறிக்கை அனுப்பவேண்டும்.

- அந்தந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை உப விதிகளில் உரிய திருத்தங்கள் செய்து நடைமுறை படுத்த வேண்டும்.
- அத்திருத்தங்கள் மேற்கொள்ளும் போது, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 306-ல் உட்பிரிவு 3 (d), (e) மற்றும் உட்பிரிவு 5-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 309 மற்றும் 310-ல் வரையறுக்கப்பட்ட விதிகளை கடைபிடிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.
- மேற்கூறியவாறு, அனைத்து மாநகராட்சிகளும் முறையே வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்குவதற்கு அந்தந்த மாநகராட்சிக்குரிய உப சட்ட விதிகளில் (By laws) திருத்தங்கள் மேற்கொள்ளும் போது, மேலே குறிப்பிட்ட அனைத்து விதிமுறைகளையும் கருத்தில் கொண்டு அதன்படி செயல்படுத்த வேண்டும்.

4. இவ்வாணை நிதித்துறையின் 22.11.2018 நாளிட்ட அ.சா.எண். 58939/நிதி/18 மூலம் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹர்மந்தர் சிங்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 005.
ஆணையர்கள், அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்.

<u>நகல்</u> :-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நிதித்துறை, சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 09.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந1, மாந6, நநி2, நநி4, நநி3, நநி5,அந2) துறை, சென்னை – 600 009
மாநில கணக்காயர், தமிழ்நாடு, சென்னை – 600 018/35
இருப்புக் கோப்பு/ உபரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

28/11/18
பிரிவு அலுவலர்.
28/11/18